**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 22–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை. 2ம் பிரதிவாதி ஆஜர். 3 முதல் 20 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 2, 3, 4, 17 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 5, 6, 7, 8, 9 14, 16 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.)

அ.வ.எண்.932/2015

பி.வா.சா.1 சிவசண்முகம்

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>

1. எனக்கும், சிவகாமிக்கும் விவாகரத்துக்கு பின்னிட்டு வாதி நவீனா மற்றும் 5ம் பிரதிவாதி தினேஷ்குமார் ஆகிய இருவரும் சிவகாமியுடன் தான் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். விவாகரத்திற்கு பிறகு எனக்கும், வாதி மற்றும் 5ம் பிரதிவாதிக்கும் எவ்வித போக்குவரத்து தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

2. வாதி மற்றும் 5ம் பிரதிவாதி பெருந்துறை கொங்கு பள்ளியில் படித்தார்கள். வா.சா.ஆ.4 விடுதலைப்பத்திரத்தில் பூர்வீக சொத்துக்களை தான் விடுதலை செய்து கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4ல் கண்டுள்ள பங்கு விகிதாச்சாரம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4ல் வாதி தரப்பினர் இல்லையென்பதால் வா.சா.ஆ.4 ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரிதான்.

3. 24.08.2009 க்குரிய வா.சா.ஆ.10 ஆன கிரயப்பத்திரத்தில் தாவா 1வது அயிட்ட சொத்தில் 2வது இணையான 35 செண்ட் பாகத்தை பொறுத்து 13 முதல் 16 பிரதிவாதிகள் பெயரில் ஏற்படுத்திக்கொடுத்த கிரையம் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தை நான் காப்பாளர் என்ற முறையில் வாதி மற்றும் 5ம் பிரதிவாதிக்காக ஏற்படுத்திக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான்.

4. மைனரின் சொத்துக்களை கிரயம் செய்து கொடுக்க நான் நீதிமன்றத்தில் அனுமதி எதுவும் கோரவில்லை என்று சொன்னால் சரிதான். மைனர் பங்குகளைப் பொறுத்து வங்கியில் வைப்பீடு தொகை எதுவும் வைத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.10

ஆவணத்தில் வா.சா.ஆ.4 ஆவணத்தை பற்றி குறிப்புகள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

5. நானும், 1, 3, 4 பிரதிவாதிகளும் சேர்ந்து தாவா 1வது அயிட்ட சொத்தில் 3வது இணையான 50 செண்ட் பாகம் மற்றும் 13வது இணையான 1.90 ஏக்கர் பாகத்தையும் பொறுத்து 12ம் பிரதிவாதி பெயரில் ஒரு கிரய ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். அதனுடைய சான்று நகல் தான் வா.சா.ஆ.11 ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள 10.07.1998 தேதியில் உள்ள பாகப்பிரிவினை ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**